# ஆவியினாலே பிறவாவிட்டால்

தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. 1பேதுரு .1:23

ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது நான உங்களுக்குசொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. யோவான் 6 :63.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நிக்கொதேமு என்ற பரிசேயனை பார்த்து ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தை காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.
அதற்கு நிக்கொதேமு ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான்.
இயேசு பிரதியுத்தரமாக ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன் என்றார்.
மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.
நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம்.
காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட்கிறாய்,ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். யோவான் 3: 3-8.

ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் பரலோகராஜியத்திலே பிவேசிக்கமாட்டான் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார். ஜலத்தினால் பிறப்பது என்பது தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தை குறிக்கிறது. இது இரட்சிக்கப்படுவதின் முக்கியமான கீழ்ப்படிதலாகும். இன்றைக்கு அநேகர்ஆவியானவரின் வல்லமையை (அபிஷேகம்) ஆவியினால் பிறப்பது என்று சொல்கிறார்கள். மேலும்

சிலர் அந்நிய பாஷை அடையாளத்தோடு அபிஷேகத்தை பெற்று கொள்வது தான் ஆவியினால் மறுப்பிறப்பு அடைவது என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் அந்நிய பாஷை பேசுகிறவர்கள் மாத்திரமே பரலோக ராஜ்ஜியத்திலே பிரவே சிப்பார்களா? இது தவறான கருத்து. அந்நியபாஷை என்பது சுகமளிக்கும் வரத்தைப்போன்ற ஒரு வரமாகும்.இது பரிசுத்த ஆவியினானவராலே அவனவன்பிரயோஜனத்திற்கு பகிர்ந்துகொடுக்கப்படுகிறது.(1கொரி 12 :10,11) மேலும், யோவான் ஸ்நானகன்,'நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞான ஸ்நானம் கொடுக்கிறேன் என்னிலும் வல்லவர் ஒருவர் வருகி றார். அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்றார்'. இதை தான் சீஷர்கள் மேல்வீட்டில் பெற்று கொண்டார்கள். ஞானஸ்நானம் என்றால் 'மூழ்குதல்' என்று பொருள். அதாவது பரிசுத்த ஆவியினாலே நிரம்பி இருப்பது. பரிசுத்த ஆவியினால் முழ்கி இருக்கும் அனுபவமாகும். பரிசுத்த ஆவி யினால் ஞானஸ்நானம் என்பது பாத்திரமாகிய நாம்பரிசுத்த ஆவியின் வல்லமையில் நிரம்பி வழியும் உன்னத அனுபவம். தேவ வல்லமை என்ற அபிஷேகத்தை பெற்று கொள்ள கூடிய மேலான அனுபவம். ஆனால் ஆவியினாலே பிறப்பது என்பது ஆத்தும இரட்சிப்பை குறிக்கும். உங்கள் ஆத்துமாவில் உண்டாகும் மறுரூபம். உள்ளான மனிதன் புதிதாக்கப்படும், அதாவது உயிர்பிக்கப்படும் அனுபவம். அதாவது தேவ வசனத்தால் மறுபடியும் பிறப்பது. இதை பரிசுத்த ஆவியானவர் மாத்திரமே செய்யமுடியும். பரிசுத்த ஆவியாவர் வரும் போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்.(யோவான் 16 : 13) என்று இயேசு சொன்னார், அவர் தான் வசனத்தின் படி உங்களை உயிர்பித்து, சுத்திகரித்து புதிய சிருஷ்டியாக மாற்ற முடியும் என்று பேதுரு சரியாக விளக்குகிறார்.

1பேதுரு .1:22,23 ல் ஆகையால், நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூறுங்கள். அழிவுள்ள

வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்
ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறு
படியும்  ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.

பரிசுத்த ஆவியானவராலே சத்தியத்துக்கு கீழ்படிந்து நம்
மை சுத்திகரித்து கொண்டு என்றென்றைக்கும் நிற்கிறதும்
ஜீவனுள்ளதுமான தேவ வசனத்தினாலே மறுபடியும்
பிறப்பது தான் ஆவியினாலே பிறப்பது. அல்லேலுயா.

1 கொரி. 6 : 11ல்  உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்
தீர்கள், ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும்,
நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்
தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.
(வெளி 19 : 13 ல் அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை
என்பதே).
1 யோவான் 2 : 5.  அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகி
றவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்.
நாம் அவருக்குள் இருக்கிறோம் என்பதை அதினாலே
அறிந்திருக்கிறோம். அவருடைய வார்த்தையினாலே
சுத்திகரிக்கப்பட்டு, வார்த்தையினாலே காக்கப்பட்டு
வார்த்தையில் வெளிச்சத்தில் நடத்தப்படுவதே
வசனத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்ட சந்ததியாக
ஜெநிப்பிக்கபடும் அனுபவம்.
இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?தேவ வசனத்தை
பரிசுத்த ஆவியானவரால் நிறைந்து தியானம் பண்ண
வேண்டும்.ஏனென்றால்பரிசுத்த ஆவியானவரே
சகலத்தையும் போதிக்கிறவர்.
தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரிய
வைகளை அறியமாட்டான்.  நாங்களோ உலகத்தின் ஆவி
யைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைக
ளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியை
யே பெற்றோம்.   1கொரி 2 : 11, 12
நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும்
அறிந்திருக்கறீர்கள். 1யோவான் 2 : 20
நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திரு
கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை.
அந்த அபிஷேகம் சகலத்தையுங் குறித்து உங்களுக்குப்

போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது.பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியேஅவரில் நிலைத்திருப் பீர்களாக 1 யோவான் 2 : 27.
நாம் பரிசுத்த ஆவியானவரால், ஆவியாயும், ஜீவனுமாயிருக் கிற சகல சத்தியத்தின் படி போதிக்கப்பட்டு அவர் தரும் தேவ பெலத்தினால் தேவ வசனத்தின் படி நடக்க நம்மை அற்பணிக்க வேண்டும். நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும் போது அவர் உங்களை ஜெபிக்கும் படியாகவும் தேவ வசனத்தை தியானிக்கும்படியாக உங்களுக்கு வாஞ்சையை உண்டாக்குவார்.
இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசித்துபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், வஞ்சகங்களையும் , பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும், ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள். 1 பேதுரு 2 : 1-3.
பரிசுத்த ஆவியானவரே தேவ வசனத்தின படி உங்களை நடத்தி பொல்லாத வழிகளை விட்டு விலக்கி உங்களை உயிர்பித்து புதிய சிருஷ்டியாக மருரூபமாக்குவார், அல்லேலூயாபரிசுத்த ஆவியானவரே சகலத்தையும் போதித் து உங்களுக்கு எல்லாவற்றையும் நினைப்பூட்டுவார் என்று இயேசு சொன்னார்.
பரிசுத்த ஆவியானவராலே நடத்தப்படும் இவர்கள் தான் தேவனுடைய சாயலாய் சிருஷ்டிக்கப்பட்ட, புதிய மனுஷனைத் தரித்து கொள்வார்கள். இவர்கள் தான் ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்து வைத்துவிட்டு போன மாதிரியையும் அடிச்சுவடையும் பின்பற்றுவார்கள். இவர்கள் தான் ஆவியின் கனிகளை பெற்றவர்களாய் தேவ னை மகிமைபடுத்துவார்கள். இவர்கள் தான் கிறிஸ்து தேவ னுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் மேலானவைகளை பெற்றுக்கொள்வார்கள். இவர்கள் தான் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பை பெற்றுக்கொண்டு பரலோகத்தில் இருக்கிற பிதாவைப்போல பூரண சற்குணராக மாறுவார்கள் .இவர்கள் தான் தன்னை நேசிப்பது போல பிறனை நேசிப்பார்கள், இவர்கள் தான் இயேசுவின் இரத்தத்தாலும் சாட்சியின் வசனத்தாலும் பிசாசை ஜெயிப்பார்கள்.

ரோமர் 5: 5ல் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிற படியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.
1 யோவான் 2 : 5 அவருடைய வசனத்தைக கைக் கொள்கிறவ னிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும் நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக் கறோம்.
பரிசுத்த ஆவியானவராலே தேவஅன்பு நம்மில் ஊற்றப்படும் அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் அருளும் தேவ பெலத்தினாலேவசனத்தை நேசித்து அதை கைக்கொள்ளும் போது தேவ அன்பு நம்மிலிருந்து வெளிப்படும்.
என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஒடும் என்றார். யோவான் 7 : 38 நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறு ஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்கு தலினாலும்நம்மை இரட்சித்தார். தீத்து 3 : 5.
பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு, கற்பனை களுக்கு கீழபடிந்து நடப்பதை தண்டவாளத்தில் ஒடுகிற நீராவி என்ஜினுக்கு ஒப்பிட்டு சொல்லலாம். அதாவது, தண்டவாளமாகிய தேவ வார்த்தையின் மேல் ஒடக் கூடிய நிராவி என்ஜினாகிய நாம் பரிசுத்த ஆவியானவராகிய நீராவியின் பெலத்தினால் சரியான பாதையில் ஓடி நித்திய ஜீவனாகிய இலக்கை அடைந்துகொள்ளும் அனுபவத்திற்கு ஒப்பிடலாம்.
யோவான் 3 : 31ல் சொல்லப்பட்டது போல் உன்னதத்தி லிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர். பூமியிலிருந்து துண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து, பூமிக்க டுத்தவைகளைப் பேசுகிறான்.ஏசாயா 55:8ல் என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகள் அல்ல என்று கர்த்தர் சொல்கிறார். நம்முடைய வழிகளும்,நினைவுகளின் தன்மைகளும் பூமிக்கு அடுத்த வைகளாக இருப்பதாலும் தெய்வத்துவத்தின் பரிபூரணத்தை பெற்றுக்கொள்ள முடியவில்லை. இன்னும் ஆதாமுடைய சாயல் (கீழ்படியாமை) நம்மிடம் இருக்கதான் செய்கிறது.
பிரசங்கி 12 : 7.இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு

மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன் வாலிப
பிராயத்திலே நினை.
1கொரி.15 :4749. முந்தின மனுஷன் பூமியிலுருந்துண்டான
மண்ணானவன். இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து
வந்த கர்த்தர். மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்
ணாவர்களும் அப்படிப்பட்டவர்களே. வானத்துக்குரியவர் எப்
படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்
களே. மேலும், மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்
திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்து
கொள்வோம்.
நாம் நம் சிந்தனைகளில் ஆண்டவராகிய இயேசுவின் சாய
லுக்கு ஒப்பாக மருரூபமாவதற்கு நாம் அழைக்கப்பட்டிருக்கி
றோம். (ரோமர் 8 : 29) எனவே தாவீது சொன்ன படி என்
ஆத்துமா மண்ணோடு (பூமியின் தன்மையோடு) ஒட்டி
கொண்டிருக்கிறது. உம் வசனத்தினாலே என்னை உயிர்ப்பி
யும் (சங்.119 :25). அதாவது ஆவியானவரே இயேசுவின்
சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனாக என்னை
மாற்றும் என்றும் ஆவியானவரே எனக்கு உதவி செய்யும்
என்றும் நம்மை அற்பணிப்போம். அப்பொழுது பரிசுத்த
ஆவியானவர் சகல சத்தியத்திற்க்குள்ளும் உங்களை நடத்தி
தேவ வார்த்தையினால் புதிய சிருஷ்டியாகும் (ஜெநிப்பிக்கு
ம்) அனுபவத்தில் உங்களை நடத்துவார். நீங்கள் தேவ சாய
லாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனிதனாய் உயிரடைவீர்கள்.
இதை ஆண்டவர் பழைய ஏற்பாட்டு நாட்களிலே தீர்க்கதரிசி
கள் மூலம் முன்னறிவித்தார்.
எசேக்கியல் 36 :25.27. அப்போழுது நான் உங்கள்மேல் சுத்த
மான ஜலம் தெளிப்பேன். நான் உங்களுடைய எல்லா அசுத்த
ங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்க
ளையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள்
சுத்தமாவீர்கள். உங்களுக்கு நவமான இருதயத்தைக்
கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்ட
ளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து
எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக்
கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியைவைத்து,
உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்க
ளைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணு
வேன்.

என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன். நீங்கள் உயிரடைவீர்கள். எசேக்கியல் 37-14

ரோமர் 8 : 11. அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக் கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.

பழைய ஏற்ப்பாட்டில் முன்னறிவித்த இந்த காரியம் ஆண்ட வரால் உடன்படிக்கை செய்து கொடுக்கப்படுகிறது. இதை பவுல் மூலம் பரிசுத்த ஆவியானவர் தெளிவுபடுத்துகிறார்.

எபி. 8 : 10. அந்த நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடு பண்ணும் உடன்படிக்கையாவது; என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுது வேன். நான் அவர்கள் தேவனாயிருப்பேன் அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்.2 கொரி 3-6 ல் அந்த உடன்படிக்கை எழுத்துக்குரியதாயிராமல் ஆவிக்குரியதாயிருக்கிறது. எழுத்து கொல்லுகிறது.ஆவி உயிர்பிக்கிறது.

இது தான்பரிசுத்த ஆவியானவரின்புதிதாக்குதல். இவர்கள் தான் தேவனுடைய ஜனங்கள். அதாவது தேவனுடைய பிள்ளைகளாய் இருப்பார்கள்.

ரோமர் 8 :14,15 ல் எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய பிள்ளைக ளாய் மாறுகிறார்கள். இதன் மூலம் அப்பா பிதாவே என்று கூப்பிடபண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியை பெறுகி றார்கள். அல்லேலூயா.... மேலும், நீங்கள் புத்திரராய் இருக் கிறபடியால் அப்பா பிதாவே என்று கூப்பிடதக்கதாக தேவன் தமது குமாரனுடையஆவியை (சுபாவத்தை) உங்கள் இருதய ங்களில் அனுப்பினார்.(கலா4.6) கிறிஸ்துவின் சுபாவம் இல்லாதவன், அவருடையவனல்ல.

நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ் டிக்கப்படும் : . சங்.104 : 30. அல்லேலூயா...

ஆமென்......